## ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சிவகங்கை மாவட்டம்

சிவகங்கை மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில், காலியாக உள்ள சாலை ஆய்வாளர் பணியிடங்களை நிரப்பிட சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவரால் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. சாலை ஆய்வாளர் பணி நியமனத்திற்கு விண்ணப்பிக்கத் தேவையான தகுதிகள், சாலை ஆய்வாளர் காலிப்பணியிட விபரம், இன சுழற்சி ஒதுக்கீடு மற்றும் விண்ணப்பப் படிவம் ஆகியவை இம்மாவட்டத்தின் www.sivaganga.nic.in இணையதளத்தில் இடம்பெற்றுள்ளது. இப்பணியிடத்திற்கான விண்ணப்பங்களை 29.01.2020 தேதி முதல் மேற்படி இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய சான்றுகளின் நகல்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சிப் பிரிவு)–க்கு அலுவலக வேலை நாட்களில் காலை **10.00** மணி முதல் மாலை **5.45** மணி வரை நேரிலோ அல்லது மாவட்ட ஆட்சியர் (வளர்ச்சி), 2-வது தளம், மாவட்ட ஆட்சியரகம், சிவகங்கை என்ற முகவரிக்கு பதிவஞ்சல் மூலமாகவோ **26/02/2020** (புதன்கிழமை) அன்று மாலை **5.45** மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும்.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
சிவகங்கை மாவட்டம்.

Scanned by CamScanner

ந.க. எண். அ/1/1267/2020 நாள் 27/01/2020

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தமிழ்நாடு

சிவகங்கை மாவட்டம்

அறிவிக்கை (NOTIFICATION)

சாலை ஆய்வாளர் காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனம்

சிவகங்கை மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்பிட தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1. | பதவியின் பெயர் | - | சாலை ஆய்வாளர் |
| 2. | பணியின் தன்மை | - | ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டிலும், வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ/கி.ஊ) / ஒன்றியப் பொறியாளரின் அறிவுரைப்படி செயல்படுதல், ஒதுக்கப்படும் சாலை மேம்பாட்டு பணிகளை மேற்பார்வையிடல் / கான்கீரிட் போடுவதை கண்காணித்தல் மற்றும் வேலைகள் குறித்த அறிக்கைகள் சமர்ப்பித்தல். |
| 3. | ஊதியம் | - | ரூ.19500-62000 என்ற ஊதிய அட்டவணையில் அரசு நிர்ணயம் செய்யும் படிகளுடன் |
| 4. | வயது | - | 2020 ஜூலை மாதம் 1ம் தேதி அன்று 35 வயதிற்கு மிகாதவராக இருத்தல் வேண்டும். |
| 5. | மொத்த பணியிடங்கள் | - | 11 |

Scanned by CamScanner

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6. | இட ஒதுக்கீடு விவரங்கள் | | | | |

| வ. எண் | விபரம் | இனசுழற்சி விபரம் | இட ஒதுக்கீடு | காலிப் பணியிட எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | பின்னடைவு காலிப்பணியிடம் | ஆதிதிராவிடர்(முன்னுரிமை அடிப்படையில் அருந்ததியினர்) SC(Arunthathiyars on Prefincial basis-W-DW | பெண்/ ஆதரவற்ற விதவை | 1 |
| 2 | | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் MBC/DNC (W-DW) | பெண்/ ஆதரவற்ற விதவை | 1 |
| 3 | | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் MBC/DNC | - | 2 |
| 4 | நடப்பு காலியிடம் | ஆதிதிராவிடர் SC (General) | - | 1 |
| 5 | | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் MBC/DNC (Women) | பெண் | 1 |
| 6 | | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் தவிர) BC (Other then Backward class muslims) | - | 1 |
| 7 | | பொதுப்போட்டி - கண்பார்வை குறைபாடு உள்ளவர் (OC Blind and Low vision) | - | 1 |
| 8 | | ஆதிதிராவிடர் SC (Women) | பெண் | 1 |
| 9 | | பொதுப்போட்டி OC(General) | | 1 |
| 10 | | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் MBC/DNC (General) | - | 1 |
| | | மொத்தம் | | 11 |

| | | | |
|---|---|---|---|
| 7. | கல்வித் தகுதி | - | ஐ.டி.ஐ (கட்டுமான வரைதொழில் அலுவலர்) சான்றிதழ் (ITI CIVIL DRAUGHTSMAN) கல்வித் தகுதி பெற்றிருக்க வேண்டும். இதற்கான கல்வியினை முழு நேர (Regular) படிப்பு முறையில் மட்டுமே பெற்றிருக்க வேண்டும். தொலைதூர கல்வி முறை (Distance Mode) மற்றும் பகுதி நேர படிப்பு (Part Time) ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. |
| 8. | கடைசி நாள் | - | **26/02/2020** பிற்பகல் **5.45** மணி வரை |

Scanned by CamScanner

**நிபந்தனைகள்:-**

1. விண்ணப்பதாரர்கள் கல்வித்தகுதி, சாதிச்சான்று, முன்னுரிமை சான்று ஆகியவைகளுக்கு ஆதாரம் கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.
2. இனசுழற்சி, வயது மற்றும் கல்வித் தகுதியுள்ள நபர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்கப்படும்.
3. விண்ணப்பப்படிவத்தில் உள்ள விபரங்களை முழுமையாக பூர்த்தி செய்து அனுப்பப்பட வேண்டும். முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.
4. தகுதியில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
5. காலம் கடந்து பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
6. எந்த ஒரு விண்ணப்பத்தையும் நிராகரிக்கும் அதிகாரம் நிர்வாகத்திற்கு உண்டு.
7. அரசு விதிகளின்படி இனசுழற்சி முறை பின்பற்றி நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய சான்றுகளின் நகல்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சிப் பிரிவு)–க்கு அலுவலக வேலை நாட்களில் காலை **10.00** மணி முதல் மாலை **5.45** மணி வரை நேரிலோ அல்லது மாவட்ட ஆட்சியர் (வளர்ச்சி), 2-வது தளம், மாவட்ட ஆட்சியரகம், சிவகங்கை என்ற முகவரிக்கு பதிவஞ்சல் மூலமாகவோ **26/02/2020** (புதன்கிழமை) அன்று பிற்பகல் **5.45** மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும்.

தகுதியுள்ள விண்ணப்பத்தாரர்களுக்கு எழுத்துத் தேர்வு நடைபெறும் இடம் மற்றும் தேதி குறித்து தேர்வு நுழைவுச்சீட்டு **(Hall Ticket)** அனுப்பி வைக்கப்படும்.

சாலை ஆய்வாளர் காலிப்பணியிடங்களுக்கான விவரங்கள் மற்றும் விண்ணப்ப படிவம் சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலும், தேசிய தொழில் நெறி வழிகாட்டு மையத்திற்கான (National Career Serivce Portal) www.ncs.gov.in என்ற இணையதளத்திலும் மற்றும் சிவகங்கை மாவட்டத்திற்கான www.sivaganga.nic.in என்ற இணையத்தளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
சிவகங்கை மாவட்டம்.

Scanned by CamScanner